சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 180 24.12.2025 WEDNESDAY MARGAZHI : 9 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 180 24.12.2025 புதன்கிழமை மார்கழி : 9 விலை : ரூ.5/–

3 'ஆன்லைன்' மோசடியில் ரூ.8 கோடி இழந்த ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ்., தற்கொலை முயற்சி

4 தெற்கு ரயில்வேயின் 129வது மண்டல ரயில்வே பயனர் ஆலோசனைக் குழுக் கூட்டம்

2 ஆர்.எஸ்.எஸ்., ஒரு தேசியவாத அமைப்பு; ஒருபோதும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை கொண்டிருப்பதில்லை: மோகன் பாகவத்

## வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து தமிழகம் சாதனை: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: டிச.24-

திமுக அரசின் முயற்சிகளால் வேளாண் உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து சாதனை புரிகிறது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேசிய விவசாயிகள் தினம் இன்று (டிசம்பர் 23). இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: உழவே தலை, உலகத்தவரின் பசிப்பிணி போக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்கு தேசிய விவசாயிகள் தினம் வாழ்த்துகள்.

வேளாண் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை, வேளாண் வணிகத் திருவிழா, வேளாண் கண்காட்சி, உழவன் செயலி, கருணாநிதியின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், இலவச மின்சார இணைப்புகள் என உழவர்களுக்காக நமது திராவிட மாடல் அரசின் முயற்சிகளால் வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து தமிழகம் சாதனை புரிகிறது.



உழவர்களை வஞ்சிக்கும் மத்திய பாஜ அரசுக்கு எதிராகவும் போராடி, உழவர் நலனைப் பாதுகாக்கிறோம். 100 நாட்கள் வேலைத் திட்டத்தைக் குலைத்து விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் மத்திய பாஜ அரசைக் கண்டித்து நாளை கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. உழவர் நலனைக் காக்கும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடரும்; உழவர் வாழ்வு செழிக்கும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வெளியிட்டுள்ள அறிக்கை: உலகிற்கு உணவளிக்கும் உழவுத் தெய்வங்கள், மண்ணோடு உயிர் கலந்த உழைப்பால் தேசத்தின் பொருளாதாரத்திற்கும், மக்களின் வாழ்விற்கும் அடித்தளமாக நிற்கும் விவசாயப் பெருமக்களுக்கு தேசிய விவசாயிகள் தின வாழ்த்துகள்.

இன்னல்களையும், இயற்கைச் சோதனைகளையும் தாண்டி, அர்ப்பணிப்பு கொண்டு உழைக்கும் அவர்களின் தியாகம் அளவிட முடியாதது.

நம் விவசாயிகளின் நலன், பாதுகாப்பு, எதிர்காலம் ஆகியவற்றை உறுதி செய்வதே நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கான அடிப்படை. உழவர் வாழ்வு உயர, தேசம் உயர உறுதியை இன்று மீண்டும் எடுத்துக்கொள்வோம். இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.



■ ஸ்ரீ சபரிமலை சபரி பார்ட்டி உழவாரப் பணி பேரவை சார்பாக திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டம் சபரிமலை சபரிபார்ட்டி பேரவை சார்பாக ஐயப்ப பக்தர்கள் மண்டல மகர கால உற்சவ திருவிழா கிருஷ்ணாபுரம் தங்கமயில் மண்டபத்தில் பஜனை பாடல்கள் உடன் 18 படி விளக்கு பூஜைகள் எஸ் எஸ் யு பி கொடி ஏற்றி சசிகுமார் வர்மா பந்தள மன்னருக்கு குருபூஜை திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அரண்மனை தலைவர் என் சங்கர் வர்மா உடன் குருசாமி தலைமை மயில்சாமி, விழா ஒருங்கிணைப்பாளர் எம் ராஜேந்திரன், குருசாமி மாநில தலைவர்,சந்திரன் மௌஸ்வரன் பொதுச் செயலாளர் மற்றும் ஐயப்ப சாமி பக்தர்கள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள் இன் நிகழ்ச்சியில் அன்னதானம் மற்றும் பிரசாதங்கள் பொதுமக்கள் வழங்கினார்கள்.




## தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை, நல உதவிகள் வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி வழங்கினார்

தேனி டிச.24

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சி மற்றும் தாட்கோ தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியம் சார்பாக அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தூய்மை பணியாளர்கள் தமிழ்நாடு நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அரசு கட்டி வைத்திருக்கும் அடுக்குமாடி கட்டிடத்தில் வீடு இல்லாத தூய்மை பணியாளர்களுக்கு, மனு மூலம் கொடுக்கப்படும் பணியாளர்களுக்கு

மனுவின் அடிப்படையில் முதலமைச்சரிடம் பரிந்துரை செய்து குடியேறுவதற்காக பணிகள் மேற்கொள்ளப்படும். எனவும் தூய்மைபணி செய்யும் போது தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் மூலம் தூய்மைப்பணி செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

இதனை தொடர்ந்து சமபந்தி வைத்து தூய்மை பணியாளர்களுடன் உணவு அருந்தினார். இந்நிகழ்வில் சின்னமனூர் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு சின்னமனூர் ஆணையாளர் கோபிநாத் வட்டாட்சியர் கண்ணன்

சுகாதார ஆய்வாளர் வேல்முருகன் மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்கள், துறை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் : அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

சின்னாளபட்டி. டிச.24

தமிழகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் என்று சின்னாளபட்டியில் நடைபெற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு, ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 10 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 100கிரிக்கெட் குழுவினருக்கு சொந்த செலவில் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.

.விழாவிற்கு ஒன்றிய செயலாளர் முருகேசன் தலைமை தாங்கினார் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ,சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ்,,துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா ஆகியோர் முன்னிலைவகித்தனர்



அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மத்தியில் பேசும்போது, இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகிறார்கள். தொடர்ந்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இந்த விளையாட்டு அரங்கம், ஒரு விளையாட்டிற்கு மட்டுமல்ல, அனைத்து வகை விளையாட்டுகளையும் விளையாடி பயிற்சி பெறும் வகையில் அமைய உள்ளது என்றார்அதன் பின்னர், 10 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 100 கிரிக்கெட் குழுவினருக்கு கிரிக்கெட் போட்டிகளுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கி சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்தினார். விழாவில், திமுக மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ் ,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் புவனேஸ்வரி அருளரசன் ராஜேஸ்வரி தங்கவேல், பிள்ளையார் நத்தம் உலகநாதன்,திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் வினோத், அரசு ஒப்பந்ததாரர்கள் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் பேரூர் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி திரளாக கலந்து கொண்டனர்

## ஈரோடு மொடக்குறிச்சி தாலுகா அலுவலக கிராம உதவியாளர்கள் சங்கத்தினர் காத்திருப்பு போராட்டம்

ஈரோடு, டிச.24-

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தாலுகா அலுவலகத்தில், தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர்கள் சங்கத்தினர் இன்று இரண்டாவது நாளாகக் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈஞ்சம்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் ஜெயந்தி, அங்கு உதவியாளராகப் பணிபுரியும் கனிமொழியை அலுவலக நாற்காலியில் அமரக்கூடாது எனத் தடுத்ததாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து வட்டாட்சியரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், கனிமொழி வேறொரு இடத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

போராட்டத்தின் கோரிக்கைகள்:

நிர்வாகத்தின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கையைக் கண்டித்தும், பணிமாற்றத்தை ரத்து செய்யக் கோரியும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு:

சங்கத்தின் மாநிலத் தலைவர் தில்லை கோவிந்தன், பொதுச்





செயலாளர் நாகப்பன், மாவட்டத் தலைவர் குருநாதன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

போராட்டக்காரர்கள் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலேயே சமையல் செய்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர்.

ஈஞ்சம்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் ஜெயந்தி, அங்கு உதவியாளராகப் பணிபுரியும் கனிமொழியை அலுவலக நாற்காலியில் அமரக்கூடாது எனத் தடுத்ததாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து வட்டாட்சியரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், கனிமொழி வேறொரு இடத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

போராட்டத்தின் கோரிக்கைகள்:

நிர்வாகத்தின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கையைக் கண்டித்தும், பணிமாற்றத்தை ரத்து செய்யக் கோரியும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு:

சங்கத்தின் மாநிலத் தலைவர் தில்லை கோவிந்தன், பொதுச் செயலாளர் நாகப்பன், மாவட்டத் தலைவர் குருநாதன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் இதில் பங்கேற்றுள்ளனர். போராட்டக்காரர்கள் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலேயே சமையல் செய்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர்.




# சென்னையில் பியூஷ் கோயல்; அதிமுகவுடன் தொகுதி பங்கீடு பேச்சு

சென்னை, டிச.24-
2026ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலில் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த தமிழக பாஜ தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் சென்னை வந்துள்ளார். அவர் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்ஐ சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார். தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு, தேர்தல் பிரசாரம் என அரசியல் கட்சிகள் தேர்தல் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

அந்தவகையில், மத்திய அமைச்சரும், தமிழக பாஜ தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ்கோயல் சென்னை வந்தார். அவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்ட பாஜ நிர்வாகிகள் பியூஷ் கோயலை பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் வரவேற்றனர். மையக்குழு கூட்டம் சென்னை கமலாலயத்தில் தமிழக பாஜவின் மையக்குழு கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் தமிழக பா.ஜ., தேர்தல் பொறுப்பாளர் பியூஷ்கோயல், இணை பொறுப்பாளர் அர்ஜூன் ராம் மேக்வால், மத்திய இணைஅமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொகுதி பங்கீடு அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்ஐ சந்தித்து, தமிழக பாஜ தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் ஆலோசனை நடத்த உள்ளார். அப்போது தொகுதி பங்கீடு குறித்து முக்கிய பேச்சு நடத்த இருக்கிறார். இதில் பாஜ போட்டியிட விரும்பும் தொகுதிகளின் பட்டியல் அதிமுக நிர்வாகிகள் வசம் ஒப்படைக்கப்பட உள்ளது



# அமெரிக்காவில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியது; 5 பேர் பலி

வாஷிங்டன், டிச.24-
டெக்சாஸின் கால்வெஸ்டனுக்கு அருகே மெக்சிகோ கடற்படை விமானம் விழுந்து நொறுங்கியதில் 5 பேர் உயிரிழந்தனர். அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள கால்வெஸ்டனுக்கு அருகே ஏழு பேரை ஏற்றிச் சென்ற ஒரு சிறிய மெக்சிகோ கடற்படை விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும், டெக்சாஸ் கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் மீட்பு பணிகள் நடந்து வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்இரண்டு பேர் பலத்த காயங்கள் உடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். விமானத்தில் இருந்தவர்களில் நான்கு பேர் கடற்படை அதிகாரிகள், நான்கு பேர் பொதுமக்கள். அவர்களில் ஒரு குழந்தையும் அடங்கும் என்று மெக்சிகோ கடற்படை தெரிவித்துள்ளது.விபத்து நடந்த இடத்தில், கடந்த சில நாட்களாக மூடுபனி நிலவிவருவதாக வானிலை ஆய்வாளர் கேமரூன் பாடிஸ்ட் தெரிவித்துள்ளார்

# வெளிநாடுகளில் ராகுல் மீண்டும் அதே பல்லவி!

பெர்லின், டிச.24-
மத்திய அரசு விசாரணை அமைப்புகளை ஆயுதமாக பயன்படுத்துகிறது என ஜெர்மனியில் நடந்த நிகழ்ச்சியில் லோக்சபா எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல் குற்றம் சாட்டியுள்ளார். வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் போது எல்லாம், இந்திய அரசை குற்றம்சாட்டும் வகையில் பேசுவது ராகுலுக்கு வழக்கம். தற்போது ஜெர்மனியின் பயணத்திலும் மத்திய அரசு மீது குற்றம்சாட்டி பேசி இருக்கிறார். ஜெர்மனியின் பெர்லினில் உள்ள ஹெர்டி பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் ராகுல் பேசியதாவது: மத்திய அரசு விசாரணை அமைப்புகளை ஆயுதமாக பயன்படுத்துகிறது. அவர்கள் விசாரணை புலனாய்வு அமைப்புகளை கைப்பற்றுகின்றனர். அமலாக்கத்துறை மற்றும் சிபிஐ பாஜவினர் மீது எந்த வழக்குகளையும் பதிவு செய்வதில்லை. பாஜவிடம் உள்ள பணத்தையும், எதிர்க்கட்சியிடம் உள்ள




பணத்தையும் பாருங்கள். ஜனநாயக அமைப்பின் மீது தாக்குதல் நடக்கிறது. இதை எதிர்ப்பதற்கான வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

நாங்கள் பாஜவை எதிர்த்து போராடவில்லை. மாறாக இந்திய விசாரணை அமைப்புகளை அவர்கள் கைப்பற்றுவதை எதிர்த்து போராடுகிறோம். இண்டி கூட்டணியின் அனைத்துக் கட்சிகளும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் சிந்தாந்தத்துடன் உடன்படவில்லை. எங்கள் கூட்டணியில் சில கட்சிகள் உள்ளாட்சி தேர்தலில் ஒன்றை ஒன்று எதிர்த்து போட்டியிட்டன. அதேநேரத்தில் நாங்கள் பார்லிமென்டில் ஒன்றுபட்டுள்ளோம். சித்தாந்தம்மத்திய அரசு மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் தொலைநோக்கு பார்வையை ஏராளமான மக்கள் ஆதரிக்கவில்லை. இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் மத்திய அரசு மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பை விட முற்றிலும் மாறுபட்ட சிந்தனைகளை கொண்டுள்ளனர். இந்தியாவில் பலர் பிரதமர் மோடியை ஆதரிக்கின்றனர். அவரது சித்தாந்தத்துடனும், அவர் கொண்டுள்ள இந்தியாவைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையுடனும் பலர் உடன்படவில்லை. அந்த தொலைநோக்குப் பார்வை தோல்வியடையும் என்று நாங்கள் நினைக்கிறோம்.


மேலும் அதில் மிகப்பெரிய பிரச்னைகள் உள்ளன. இது இந்தியாவில் மிகப்பெரிய பதட்டங்களை உருவாக்கி, இந்திய மக்களை ஒருவருக்கொருவர் சண்டையிட வைக்கும். நாங்கள் அதை எதிர்த்துப் போராடுவோம். இது இந்தியாவில் இரண்டு தொலைநோக்குப் பார்வைகளுக்கு இடையிலான மோதல். இவ்வாறு ராகுல் பேசினார்.

# ஆர்.எஸ்.எஸ்., ஒரு தேசியவாத அமைப்பு; ஒருபோதும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை கொண்டிருப்பதில்லை: மோகன் பாகவத்

புதுடில்லி:, டிச.24-
''ஆர்.எஸ்.எஸ்., ஒரு தீவிரமான தேசியவாத அமைப்பு; ஒருபோதும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை கொண்டிருப்பதில்லை,'' என, அதன் தலைவர் மோகன் பாகவத் தெரிவித்துள்ளார்ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின், 100வது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மேற்கு வங்கத்தின் கொல்கட்டாவில் நிகழ்ச்சி ஒன்று நேற்று முன்தினம் நடந்தது. இதில், பங்கேற்ற ஆர்.எஸ்.எஸ்., தலைவர் மோகன் பாகவத் பேசியதாவது: சூரியன் கிழக்கில் உதிக்கிறது. எப்போது இருந்து இந்த செயல் நடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. சூரியன் கிழக்கில்தான் உதிக்கிறது என்பதற்கு நம் அரசியலமைப்பின் ஒப்புதல் தேவையா? தேவையில்லை. இதுபோல், ஹிந்துஸ்தான் ஒரு ஹிந்து தேசம்.

இந்தியாவை தங்கள் தாய்நாடாக கருதுவோர், நம் கலாசாரத்தை பாராட்டுகின்றனர். ஹிந்துஸ்தான் நிலத்தில் இந்திய மூதாதையர்களின் மகிமையை நம்பும், போற்றும் நபர் உயிருடன் இருக்கும் வரை இந்தியா ஒரு ஹிந்து தேசம். இது தான், ஆர்.எஸ்.எஸ்.,சின் சித்தாந்தம். பார்லிமென்ட் எப்போதாவது நம் அரசியலமைப்பை திருத்தி, 'இந்தியா ஒரு ஹிந்து தேசம்' என்ற வாக்கியத்தை சேர்க்க முடிவு செய்தால், அது அரசின் விருப்பம். அவ்வாறு செய்தாலும், செய்யாவிட்டாலும் அதைப்பற்றி எங்களுக்கு ஒரு கவலையும் இல்லை. அதுதான் உண்மை.

தேசியவாத அமைப்புபிறப்பை அடிப்படையாக கொண்ட ஜாதி அமைப்பு ஹிந்துத்வாவின் முத்திரை அல்ல. பண்பாடு மற்றும் பெரும்பான்மையாக



உள்ளோரின் ஹிந்து மத தொடர்புகளை கருத்தில் கொண்டு, இந்தியா ஒரு ஹிந்து தேசம் என ஆர்.எஸ்.எஸ்., வாதாடி வருகிறது. மதச்சார்பற்ற என்ற வார்த்தை அரசியலமைப்பின் முகவுரையில் முதலில் இடம்பெறவில்லை.முன்னாள் பிரதமர் இந்திரா அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட போது, 1976ல் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வாயிலாக சோசலிசம் மற்றும் மதச்சார்பின்மை என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன.தவறான பிரசாரம் காரணமாக, முஸ்லிம்களின் எதிரி ஆர்.எஸ்.எஸ்., என்ற பிம்பம் உருவாக்கப்பட்டு வருகிறது. இது, தீவிரமான தேசியவாத அமைப்பு. ஒருபோதும், முஸ்லிம் எதிர்ப்பு உணர்வை கொண்டிருப்பதில்லை.நேரில் வந்து பாருங்க

ஆர்.எஸ்.எஸ்., பணிகளை நேரில் பார்த்த சிலர், 'நீங்கள் தேசியவாதிகள்; ஹிந்துக்களின் பாதுகாப்புக்காக வாதிடுகிறீர்கள்; அவர்களை ஒருங்கிணைக்கிறீர்கள். நீங்கள் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் அல்ல' என, குறிப்பிடுகின்றனர். அவ்வாறு சொல்பவர்கள் எல்லாம், ஆர்.எஸ்.எஸ்.,சின் செயல்பாடுகளை நேரில் கண்டவர்கள். எனவே, ஆர்.எஸ்.எஸ்., அமைப்பு பற்றி பேசுபவர்கள், எங்கள் செயல்பாடுகளை நேரில் வந்து பார்க்க வேண்டும். மாற்றிக்கொள்ளுங்கள்அப்படி ஏதாவது முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு இருப்பது தெரிந்தால், உங்கள் கருத்துகளை சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறு இல்லையென்றால், ஆர்.எஸ்.எஸ்., தொடர்பான உங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின் கருத்துகளை புரிந்துகொள்ள முடியாதவர்களின் மனதை யாராலும் மாற்ற முடியாது.நம் அண்டை நாடான வங்கதேசத்தில், சிறுபான்மையினராக வசிக்கும் ஹிந்துக்கள் பயங்கரமாக தாக்கப்படுகின்றனர். இங்குள்ள ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதை கண்டிக்க வேண்டும்; தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# தங்கம் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1600 அதிகரிப்பு ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை தாண்டி புதிய உச்சம்

சென்னை, டிச.24-
சென்னையில் நேற்று(டிசம்பர் 23) தங்கம் விலை சவரனுக்கு ரூ.1600 அதிகரித்து, ஒரு சவரன் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 160 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

தங்கம், வெள்ளி மீது, சர்வதேச முதலீட்டாளர்கள் அதிகளவில் முதலீடு செய்கின்றனர். இதனால், நம் நாட்டில் அவற்றின் விலை உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் எப்போதும் இல்லாத வகையில், இம்மாதம், 15ம் தேதி, 22 காரட் ஆபரண தங்கம் சவரன், 1 லட்சத்து, 120 ரூபாய்க்கு விற்பனையானது. இதுவே, தங்கம் விற்பனையில் உச்ச விலையாக இருந்தது. பின், விலை சற்று குறைந்தது.கடந்த சனிக்கிழமை தங்கம் கிராம், 12,400 ரூபாய்க்கும், சவரன், 99,200 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 226 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை தங்கச் சந்தைக்கு விடுமுறை. அன்று முந்தைய நாள் விலையிலேயே ஆபரணங்கள் விற்பனையாகின. நேற்று காலை தங்கம் விலை கிராமுக்கு, 80 ரூபாய் உயர்ந்து, 12,480 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சவரனுக்கு, 640 ரூபாய் அதிகரித்து, 99,840 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளி கிராமுக்கு, ஐந்து ரூபாய் உயர்ந்து, 231 ரூபாய்க்கு விற்கப்பட்டது.நேற்று மாலையில், மீண்டும் தங்கம் விலை கிராமுக்கு, 90 ரூபாய் உயர்ந்து, 12,570 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 720 ரூபாய் அதிகரித்து, 1,00,560 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. நேற்று ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு, 1,360 ரூபாய் அதிகரித்தது.இந்நிலையில் இன்று (டிசம்பர் 23) தங்கம் விலைசவரனுக்கு ரூ.1600 அதிகரித்து, ஒரு சவரன் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து160 ரூபாய்க்கு விற்பனைஆகிறது. கிராமுக்கு ரூ.200 அதிகரித்து ஒரு கிராம் ரூ.12,770க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் ரூ.234க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# கடற்படை குறித்து பாக்.,கிற்கு தகவல் அனுப்பியவர் கைது

உடுப்பி, டிச.24-
கர்நாடகாவின் உடுப்பி மல்பே கடல் பகுதியில், 'கொச்சி ஷிப் யார்டு' நிறுவனத்திற்கு சொந்தமான கப்பல் கட்டும் தளம் உள்ளது. நம் நாட்டின் கடற்படைக்காக தயாரிக்கப்படும் கப்பல்களின் திறன், போர் கப்பல்களின் திறன் குறித்த ரகசிய தகவல்கள், இங்கிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுவதாக தகவல் கிடைத்தது.

இதன்படி, கர்நாடக போலீசார் விசாரித்தனர். இது தொடர்பாக, உத்தர பிரதேசத்தை சேர்ந்த ரோகித், 29, சாந்திரி, 37, ஆகிய இருவரை கடந்த மாதம் கைது செய்தனர். இவர்களுடன் வேறு யாரே னும் தொடர்பில் உள்ளனரா என்பது குறித்து போலீசார் விசாரித்தனர்.

இதில், மல்பே கப்பல் கட்டும் தளத்தில் பணிபுரியும் ஹிரேந்திர குமார், 34, என்பவருக்கு தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவரை உடுப்பி போலீசார் கைது செய்தனர்.

குஜராத்தைச் சேர்ந்த இவர் . 'வாட்ஸாப்' மூலம் பாகிஸ்தானில் உள்ளவர்களுக்கு இந்திய கப்பல்கள் குறித்த ரகசிய தகவல்களை அனுப்பியதும் தெரியவந்தது.

உடுப்பி போலீஸ் எஸ்.பி., ஹரிராம் சங்கர் கூறுகையில், ''ஹிரேந்திர குமார், தன் பெயரில் சிம் கார்டுகள் வாங்கி சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வந்தார். ஏற்கனவே கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கும் ஆலோசகராக இருந்துள்ளார்,'' என்றார்

# ஏழைகளுக்குப் பயணம் எட்டாக்கனியாகும்: ரயில்களை தனியார்மயமாக்கக் கூடாது; ராமதாஸ்

சென்னை, டிச.24-
ஏழைகளுக்குப் பயணம் எட்டாக்கனியாகும் என்பதால், ரயில்களை தனியார்மயமாக்கக் கூடாது என, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்இதுதொடர்பாக ராமதாஸ் இன்று (செப்.25) வெளியிட்ட அறிக்கையில், "இந்தியாவில் அதிகம் பேர் பயணிக்கும் ரயில் வழித்தடங்களை தனியாருக்கு தாரை வார்க்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. ஏழை மக்களின் நலனில் அக்கறையற்ற, தனியார் நிறுவனங்களின் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இந்த முடிவு மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.



தமிழ்நாட்டில் ரயில் சேவைகளை வழங்கும் தெற்கு ரயில்வே துறை உள்ளிட்ட மொத்தம் 6 ரயில்வே மண்டலங்களின் தலைமை இயக்க மேலாளர்களுக்கு இந்திய ரயில்வே வாரியம் அனுப்பியுள்ள 23.09.2019 தேதியிட்ட சுற்றறிக்கையில் தான் ரயில்களை தனியார்மயமாக்குவது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து மதுரை, கோவை, பெங்களூரு, டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய நகரங்களுக்கு செல்லும் வழித்தடங்கள் உள்ளிட்ட 150 வழித்தடங்களை அடையாளம் கண்டுள்ள ரயில்வே வாரியம், அவற்றில் எந்தெந்த வழித்தடங்களில் தனியார் ரயில்களை இயக்க அனுமதிக்கலாம் என்பது குறித்த கருத்துகளைத் தெரிவிக்கும்படி மண்டல ரயில்வே துறை நிர்வாகங்களைக் கேட்டிருக்கிறது. இதுகுறித்து இறுதி முடிவெடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுநாள் (செப்.27) காலை 11 மணிக்கு டெல்லியில் நடைபெறும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. டெல்லியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் தயாரிக்கப்பட்டு, ரயில் வழித்தடங்கள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிகிறது. ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் நலன் சார்ந்த கோணத்தில் பார்க்கும் போது இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். இது இந்தியாவின் முக்கியமான போக்குவரத்து முறையை தலைகீழாகச் சிதைக்கும் நோக்கம் கொண்டதாகவே அமையும். ரயில் பாதைகளை தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்கள் பயணிகளின் தேவைக்கு ஏற்ப அதிக எண்ணிக்கையில் ரயில்களை இயக்குவார்கள்; மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் ரயில்கள் இயக்கப்படும்; நவீன வசதிகள் கொண்ட ரயில்கள் அறிமுகப்படுத்தப்படும்; இதனால் பயணிகள் மிகவும் விரைவாகவும், மகிழ்ச்சியாகவும் பயணிக்க முடியும் என்று ரயில்வே வாரியம் கூறியுள்ளது.மேலோட்டமாகவும், மேட்டுக்குடி மக்களின் கோணத்திலிருந்தும் பார்க்கும் போது இவை உண்மை தான் என்பதை மறுக்க முடியாது. ரயில்களைத் தனியார் மயமாக்குவதால் ஏற்படும் நேர்மறையான பயன்களை கூறியுள்ள ரயில்வே வாரியம், எதிர்மறையான விளைவுகளை மறைக்க முயன்றிருக்கிறது. தனியார் ரயில்கள் இயக்கப்பட்டால் அவற்றின் பயணக்கட்டணம் பல மடங்கு உயர்த்தப்படும். இப்போது வசூலிக்கப்படும் பயணிகள் கட்டணத்தில் சராசரியாக 47% மானியமாக வழங்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் ரூ.42,000 கோடி இழப்பை, சரக்குப் போக்குவரத்தில் கிடைக்கும் லாபத்திலிருந்து ரயில்வே துறை ஓரளவு சமாளிக்கிறது. தனியார் ரயில்கள் இயக்கப்படும் போது இந்த ரூ.42,000 இழப்பும் பயணிகள் தலையில் சுமத்தப்படும். இதற்காக ரயில் கட்டணம் 28% முதல் 244% வரை உயர்த்தப்படும். இந்த உயர்வை அடித்தட்டு மக்களால் தாங்க முடியாது.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பேருந்துக் கட்டணத்தை விட ரயில் கட்டணம் குறைவாக உள்ளது. முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் இன்னும் கட்டணம் குறைவு என்பதால், அவை ஏழைகளிலும் ஏழைகளுக்கு வரப்பிரசாதமாக உள்ளன. தனியார் ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகள் இருக்காது என்பதாலும், சாதாரண வகுப்புக் கட்டணம் இரு மடங்கு உயர்த்தப்படும் என்பதாலும் ஏழைகளுக்கு ரயில் பயணம் என்பது எட்டாக்கனியாகிவிடும். சென்னை, மும்பை, கொல்கத்தா, செகந்திராபாத் ஆகிய நகரங்களின் புறநகர் ரயில்களும் தனியார்மயமாக்கப்படும் என்பதால் குறைந்த கட்டணத்தில் புறநகர் ரயில்கள் மூலம் அன்றாடம் பள்ளி, கல்லூரிகள் மற்றும் அலுவலகங்களுக்கு செல்பவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். புறநகர் ரயில் கட்டணங்களில் 66% மானியம் வழங்கப்பட்டு வருவதால், அவை தனியார்மயமாக்கப்படும் போது 3 மடங்கு அளவுக்கு கட்டணம் உயர்த்தப்படும். மாதாந்திர பயணச்சீட்டு முறையும் ஒழிக்கப்படும் என்பதால் புறநகர் ரயில்களில் பயணிப்பவர்கள் மாதம் ரூ.2000 வரை கூடுதலாக செலவழிக்க வேண்டியிருக்கும். அதுமட்டுமின்றி, நூற்றுக்கணக்கான ரயில்கள் தனியார்மயமாக்கப்படுவதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை உருவாகும் அல்லது அந்த பணியிடங்கள் ஒழிக்கப்படக்கூடும். இவை எதுவுமே ரயில்வே துறையின் வளர்ச்சிக்கோ, மக்களின் முன்னேற்றத்திற்கோ வழிவகுக்காது. நாடாளுமன்ற மக்களவையில் கடந்த ஜூலை 12 ஆம் தேதி ரயில்வே துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய அமைச்சர் பியூஷ் கோயல், ரயில்வே துறை ஒருபோதும் தனியார்மயமாக்கப்படாது என்று உத்தரவாதம் அளித்திருந்தார். அவ்வாறு உத்தரவாதம் அளித்து 75 நாட்கள் கூட ஆகாத நிலையில் ரயில்களை தனியார்மயமாக்கத் துடிப்பது நியாயம் அல்ல.

ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு ரயில்களை தனியார்மயமாக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும்," என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.


# ‘ஆன்லைன்’ மோசடியில் ரூ.8 கோடி இழந்த ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ்., தற்கொலை முயற்சி



பாட்டியாலா, டிச.24-

பஞ்சாபில், ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ்., அதிகாரி ஒருவர், ஆன்லைனில் 8.10 கோடி ரூபாயை இழந்த நிலையில், தற்கொலைக்கு முயன்று ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பணம் முதலீடு பஞ்சாபின் பாட்டியாலாவைச் சேர்ந்தவர் ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ்., அதிகாரி அமர் சிங் சாஹல். இவர், ஆன்லைன் வாயிலாக நடத்தப்பட்ட போலி நிதி நிறுவனத்தில், தொடர்ந்து பணம் முதலீடு செய்து வந்தார்.இந்நிலையில், தன் வீட்டில் துப்பாக்கியால் சுட்டு நேற்று தற்கொலைக்கு முயன்றார். வீட்டில் இருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் சேர்த்தனர்ஆபத்தான நிலையில் உள்ள அமர் சிங்குக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இதற்கிடையே, அவரது அறையில் இருந்து, 16 பக்கங்கள் அடங்கிய தற்கொலை குறிப்பு கடிதத்தை போலீசார் கைப்பற்றினர். அதில் அவர் கூறியுள்ளதாவது:'வாட்ஸாப்' வாயிலாக துவங்கப்பட்ட நிதி நிறுவனத்தில் சில ஆண்டுகளுக்கு முன் முதலீடு செய்தேன். கூடுதல் கட்டணம் தனியார் வங்கியின் பெயரில் நிதி பரிவர்த்தனைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதில், பலமுறை முதலீடு செய்தேன்.என்னைப் போல் பலரும் அந்த நிறுவனத்தில் இணைந்து பல கோடி ரூபாய் முதலீடு செய்தனர்.

பணம் மட்டுமே செலுத்தப்பட்ட நிலையில், ஒரு கட்டத்தில் பணத்தை திருப்பி எடுக்க முயன்றேன். அதற்கான நடைமுறையின்போது, கூடுதல் கட்டணம் செலுத்த சொல்லி அந்த நிறுவனத்தினர் அழுத்தம் தந்தனர். அடுத்தடுத்து என, 8.10 கோடி ரூபாய் வரை செலுத்தியும், முதலீடு செய்த பணத்தை எடுக்க முடியவில்லை. அதன்பின்னரே, இது மோசடி என்பதை அறிந்தேன். வீட்டில் இருந்தவர்களுக்கு கூட தெரியாமல், அந்த மோசடி நிறுவனத்தில் தொடர்ந்து முதலீடு செய்து வந்தேன். பணத்தை திரும்ப பெற முடியாதது மன அழுத்தத்தை ஏற்படுத்தியது.எனவே, நான் தற்கொலை செய்து கொள்கிறேன். வீட்டில் உள்ள உறவினர்கள் என்னை மன்னிப்பர் என நம்புகிறேன். நடவடிக்கை என் தற்கொலைக்கு, மோசடி நிதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை தவிர வேறு யாரும் காரணமில்லை. அவர்கள் மீது போலீசார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்இவ்வாறு அதில் கூறியுள்ளார்.



■ கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணார் போஸ்ட் ஆபிஸ் ஜங்சனில் சுற்றுலாத்துறைக்கு சொந்தமான கம்போர்ட் ஸ்டேசனை திறந்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்க வேண்டியும்,பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு இன்னும் இரண்டு தினங்களை கிறிஸ்துமஸ் பண்டிகை உள்ள நிலையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவதை ஒட்டி இந்த இடத்தை தூய்மைப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க இடுக்கி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கோரிக்கை வைக்கின்றனர்



# சிறுபான்மையின மக்கள் காட்டும் அன்பிற்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, டிச.24-

சிறுபான்மையின மக்கள் என்மீது காட்டும் அன்பிற்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என்று சின்னாளபட்டி புனித சகாயமாதா அன்னை ஆலயத்தில் பேவர் பிளாக் கற்கள் சாலை திறப்புவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். சொந்த செலவில் ரூ. 15 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் கற்கள் சாலை அமைத்துக் கொடுத்தற்கு அமைச்சருக்கு இறை மக்கள் பாராட்டும், நன்றியும் தெரிவித்தனர். இதன் திறப்புவிழா ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆயர் தாமஸ் பால்சாமி, தலைமை தாங்கினார். ஊர் பெரிய தலைவர் ஜான்சுரேஷ், செயலாளர் மூங்கில்கடை சேசு, பொருளாளர் ஜோஸ்வா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இடைவிடா புனித சகாய அன்னை ஆலய பங்குத்தந்தை ஸ்டீபன் கஸ்பார், வரவேற்றார்.நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி. ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், ஒன்றிய துணைச் செயலளார்கள் எம்.சி. பாண்டியன், ராஜேந்திரன், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் அறிவழகன், மோகன்ராஜ், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இராஜகணேஷ், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# ஆத்தூர் தொகுதி 2026 சட்டமன்ற தேர்தலில் வரலாற்று சாதனை படைக்க வாக்குசாவடி முகவர்கள் அயராது உழைக்க வேண்டும் கள்ளிப்பட்டி மணி

சின்னாளபட்டி, டிச.24-




திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி பாகம் எண் 300 க்கான என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், வாக்குசாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபாகனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வார்டு கிளைச் செயலாளர் மகுடீஸ்வரன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஆத்தூர் தொகுதி திமுக தலைமை கழக பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி நிர்வாகிகள் மத்தியில் பேசும்போது தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் வராற்று சாதனை பெற்ற தொகுதி ஆத்தூர் தொகுதி. வாக்குசாவடி முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாக்காளர்களை சந்தித்து அதிக அளவில் நமது திமுக கூட்டணிக்கு கிடைக்க அயராது உழைக்க வேண்டும். தலைமைக் கழகத்திலிருந்து உங்களை தொலைபேசி மூலம் அழைத்தால் அதற்கு முறையான பதில் அளிக்க வேண்டும். இது தவிர உங்கள் பகுதியில் உள்ள கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களுடன் இணைந்து களப்பணி ஆற்ற வேண்டும். ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். நீங்கள் அந்த நலத்திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் எடுத்துரைத்து திமுகவின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஆலோசனை கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், முன்னாள் நகர செயலாளர் மோகன்ராஜ், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், 4வது வார்டு உறுப்பினர் ஜெயகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி முத்துவேல், 2வது வார்டுசெயலாளர் மகாலிங்கம், வாக்குசாவடி முகவர்கள் பிரகாஷ், ராமச்சந்திரன், மயில்சாமி, அஜய், கோகிலா, பழனி, நித்யா, ஈஸ்வரி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.





# காந்திகிராமத்தில் பட்டாளம்மன் கோவில் 40ம் ஆண்டு உற்சவ விழா

அலங்காநல்லூர், டிச.24-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே காந்திகிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பட்டாளம்மன், திருக்கோவில் 40ம் ஆண்டுஉற்சவ விழாவை முன்னிட்டு, 1008 திருவிளக்கு பூஜை நடந்தது. பட்டாளமனுக்கு பொங்கல் வைத்து அபிஷேக ஆராதனை நடைபெற்றது. முன்னதாக மாபெரும் அன்னதானம் நடந்தது. திருவிழா ஏற்பாடுகளை முருக பக்தர்கள் ஐயப்ப பக்தர்கள் மற்றும் காந்திகிராம பொதுமக்கள் ஆனந்த சித்தன் ஐயப்பா சேவா சங்கத்தினர் செய்திருந்தனர்.



# முடுவார்பட்டி குட்டகல் தர்ம சாஸ்தா ஆலயத்தில் 23 ம் ஆண்டு திருவிளக்கு பூஜை

அலங்காநல்லூர். டிச.24-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே முடுவார்பட்டி கிராமம் குட்டக்கல்லில் அமைந்துள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் 23ம் ஆண்டு கன்னி பூஜை வழிபாடு மற்றும் 1008 திருவிளக்கு பூஜை நடந்தது.தொடர்ந்து மாபெரும் அன்னதானம் நடந்தது.அன்று இரவு ஆலயத்திலிருந்து தர்ம சாஸ்தா வீதி உலா வருதல் நடந்தது. ஆலயத்தில் அமைந்திருக்கும் 18 படிகளுக்கு படி பூஜை நடந்தது. இதில் ஏராளமான ஐயப்ப முருக பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை குட்டக்கல் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் முருக பக்தர்கள் செய்திருந்தனர்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பம்: 1.53 லட்சம் பேர் மனு

சென்னை, டிச.24-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கோரி இன்று வரை 1.53 லட்சம் பேர் விண்ணப்பம் அளித்துள்ளனர்.தமிழகத்தில் எஸ்ஐஆர் பணிகள் நிறைவடைந்து, டிச.19ம் தேரித அனைத்து மாவட்டங்களிலும் வாக்காளர் வரைவு பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. 5.43 கோடி வாக்காளர்கள் உள்ளதாகவும், 97.37 லட்சம் பேர் நீக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.வரைவு வாக்காளர் பட்டியலானது தமிழகம் முழுவதும் உள்ள 75 ஆயிரம் ஓட்டுச்சாவடிகளில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.இதை வாக்காளர்கள் பார்வையிட்டு வரும் சூழலில், அதில் நீக்கப்பட்டவர்கள் தங்கள் பெயரை பட்டியலில் சேர்க்க விண்ணப்பித்து வருகின்றனர்.டிச.19ம் தேதி முதல் இன்றைய தினம் வரை பெயர் சேர்ப்புக்கு படிவம் 6 மற்றும் 6 ஏ படிவங்களை நிரப்பி 1 லட்சத்து 53 ஆயிரத்து 571 பேர் விண்ணப்பித்து உள்ளனர். இதற்கு ஆட்சேபனை தெரிவித்து படிவம் 7 ஐ நிரப்பி பேர் மனு அளித்துள்ளனர். இந்த விவரத்தை தமிழக தலைமை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது.

# அமைச்சர் அறிவிப்பை ஏற்க மறுத்து செவிலியர்கள் 5வது நாளாக போராட்டம்




சென்னை, டிச.24-

பணி நிரந்தரம் கோரி செவிலியர்கள் போராடி வரும் நிலையில், அவர்களுடன் இரண்டாவது முறையாக பேச்சு நடத்திய அமைச்சர் சுப்பிரமணியன், 723 பேரை பணி நிரந்தரம் செய்வதாக அறிவித்தார். அதை ஏற்க மறுத்து, ஐந்தாவது நாளாக, அரசு செவிலியர்கள் கடும் குளிரிலும் போராட்டத்தை தொடர்ந்தனர்.தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில், பணி நிரந்தரம், சம வேலைக்கு, சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 18ம் தேதி, சென்னை சிவானந்தா சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் செவிலியர்கள் ஈடுபட்டனர். இறக்கி விட்டனர்அப்போது, மக்கள் நல்வாழ்வு துறை செயலர் செந்தில்குமாருடன், சங்க நிர்வாகிகள் நடத்திய பேச்சில் தீர்வு ஏற்படாததால், போலீசார் அனுமதித்த நேரத்தை தாண்டியும் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால், அவர்களை கைது செய்த போலீசார், கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறக்கி விட்டனர்.இரவு நேரத்திலும் அங்கே போராட்டத்தை செவிலியர்கள் தொடர்ந்ததால், மீண்டும் கைது செய்யப்பட்டு, மண்டபத்தில் அடைத்தனர். பின், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சுப்பிரமணியன் பேச்சு நடத்தினார். அதில் உடன்பாடு ஏற்படாத நிலையில், மாலையில் விடுவிக்கப்பட்ட செவிலியர்கள், கூடுவாஞ்சேரியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில், போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.செவிலியர்கள் போராட்டம் ஐந்தாவது நாளாக தொடர்ந்த நிலையில், அவர்களுடன் அமைச்சர் சுப்பிரமணியன், நேற்று மீண்டும் பேச்சு நடத்தினார். அப்போது, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்க நிர்வாகிகளுடன், மற்ற செவிலியர் சங்கத்தினரும் பங்கேற்றனர். அமைச்சரின் கோரிக்கையை சில சங்கங்கள் ஏற்ற நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்க நிர்வாகிகள் ஏற்க மறுத்து, நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவு அறிவிப்பதாக தெரிவித்தனர். அரசாணைஅமைச்சர் சுப்பிரமணியன் கூறியதாவது:நிரந்தர பணியாளர்களை போல, தொகுப்பூதிய செவிலியர்களுக்கும் மகப்பேறு விடுப்பு வேண்டும் என்ற கோரிக்கைக்கு, அரசாணை வெளியிடப்பட உள்ளது.கடந்த 2014 15ல், தற்காலிக செவிலியர்களை, மருத்துவ பணியாளர் தேர்வாணையம் வாயிலாக, அன்றைய முதல்வர் ஜெயலலிதா நியமித்தார்.மேலும், இரண்டு ஆண்டுகள் பணி செய்த பின், செவிலியர் துறையில் காலி பணியிடம் உருவானால், பணி நிரந்தரம் என, சொல்லப்பட்டு, பணி நியமனம் நடந்துள்ளது; இந்த முறையே தவறு. எனினும், 7,000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு உள்ளனர். இந்த அரசு பொறுப்பேற்ற பின், 3,614 பேரை பணி நிரந்தரம் செய்துள்ளோம். தற்போது, 8,322 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.தேர்தல் அறிக்கையில் சொன்னது போல, தொகுப்பூதிய செவிலியர்களுக்கான ஊதியம், 14,000 ரூபாயில் இருந்து, 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது, 169 பணியிடங்களுக்கு பணி ஆணைகள் தயார் செய்யும் பணி நடந்து வருகிறது.அத்துடன், பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த செவிலியர் கண்காணிப்பாளர் நிலை 2 பதவி உயர்வு, 266 பேருக்கு வழங்கப்பட உள்ளது. அ தேபோல், செவிலியர் போதகர் நிலை 2 பணியிடங்களுக்கு, 140 பேர் பதவி உயர்வு பெறுகின்றனர்.

மேலும், அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டடங்களில், 148 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இதுபோன்றவற்றால், 723 தொகுப்பூதிய செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர். மற்ற, 7,599 பேருக்கு காலி பணியிடங்களுக்கு ஏற்ப பணி நிரந்தர ஆணை வழங்கப்படும்.கொரோனா காலத்தில் பணியாற்றிய, 716 பேரும் தொகுப்பூதிய அடிப்படையில், நியமிக்கப்பட உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.



# இடுக்கி சாஸ்தா நடை அரசு பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம்

இடுக்கி டிச.24-

இடுக்கி மாவட்டம் நெடுங்கண்டம் உபகல்வி மாவட்டத்திலுள்ள வண்டன்மேடு கிராம பஞ் சாயத்தில் சாஸ்தா நடை அரசுஆரம்பப் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழாவும், சாஸ்தா நடை,முக்கடி வார்டுகளில் வெற்றி பெற்ற வார்டு உறுப்பினர்களுக்கு பாரட்டு விழாவும் நடைபெற்றதுஇவ் விழாவை தலைமையாசிரியர் பாண்டுரெங்கன் தலைமை தாங்கினார். விழாவிற்கு முருகன் ஆசிரியர் வரவேற்புரை ஆற்றினார் விழாவில் சிறப்பு அழைப்பாளராக சாஸ்தாநடை, முக்கடி வார்டு உறுப்பினர்பவானி, ரம்யா பங்கு பெற்றனர்,அவர்களுக்கு பள்ளியின் சார்பாக பராட்டி வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது இவ்விழாவில் மாணவ மாணவிகள் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்து ஆடி பாடி மகிழ்ந்தனர் விழாவில் சாரம்மா, ஆர்த்தி , சூரியா,ஜோய்ஸ் மோள் சைலா பங்கேற்று சிறப்பித்தனர். ஆசிரியர் மணிகண்டன் நன்றி உரையாற்றினார்



# திருப்பூர் மாவட்ட பிரம்ம குமாரிகள் அமைப்பின் சார்பில் அகில உலக தியான தினம்

திருப்பூர், டிச.24-

திருப்பூர் மாவட்ட பிரம்ம குமாரிகள் அமைப்பின் சார்பில் அகில உலக தியான தினம் ஹார்வி குமார சாமி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது..... பிரம்மா குமாரிகள் தியான நிலையத்தின் திருப்பூர் மாவட்ட பொறுப்பு சகோதரி ரேணுகா சகோதரி தலைமையில் நடைபெற்றது.இதில் முன்னாள்

டெக் மா தலைவர் திரு. ரி. றி. கோவிந்தசாமி, கல்கத்தா நிட்டிங்ஸ் திரு.மதன்லால் சர்மா ஜி மற்றும்திரு. சுரேஷ் சர்மா, திரு.கே. பி கே.செல்வராஜ் பழனி ஆண்டவர் குரூப் ஆஃப் கம்பெனிஸ் - நேஷனல் ஸ்கூல்ஸ், திரு.லயன் சிம்கோ சம்பத் டிரஸ்டி விஸ்வேஸ்வர சுவாமி வீரராகவப் பெருமாள் கோவில் திருப்பூர்... திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் ஹார்வி குமாரசாமி கல்யாண மண்டபம் டிரஸ்ட் திருப்பூர், திரு. சுரேஷ்குமார் அவர்கள் வைஸ் பிராசிடெண்ட் குஜராத்தி கல்யாண மண்டபம் திருப்பூர் சேலம் ரயில்வே டிவிஷன் மெம்பர், ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளக்கேற்றி தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் உட்பட 1000திருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்...இந்த நிகழ்வு காலை 10 மணி முதல் மாலை 7.30 மணி வரை நடைபெற்றது.




# மதுரை மாவட்டம் ஊமச்சிகுளம் ஆலத்தூரில் திமுக சார்பில் செயல் வீரர் கூட்டம்

மதுரை.டிச.24-

மதுரை மாவட்டம் ஊமச்சிகுளம் அருகே உள்ள ஆலத்தூர் தனியார் திருமண மண்டபத்தில், மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவை தலைவர் பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கலந்து கொண்டு வரும் 2026 ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் குறித்த நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.இதில் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தரம், மற்றும் சம்பத், தனச்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் புதூர் சேகர், அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண்,ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திகேயன், பேரூர் செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், பால்பாண்டி, சத்தியபிரகாஷ், பேரூராட்சி தலைவர்கள்ரேணுக ஈஸ்வரி கோவிந்தராஜ், சுமதி பாண்டியன், ஜெயராமன், துணைத் தலைவர் வாடிப்பட்டி வக்கீல் கார்த்திக், அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி

சேதுசீனிவாசன், தண்டலை சரவணன், சக்தி முருகன், செந்தில்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, மாணவரணி அமைப்பாளர் யோகேஷ், சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தண்டலை தவசதிஷ், இளைஞரணி நிர்வாகிகள்ரியாஸ்கான், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# தெற்கு ரயில்வேயின் 129வது மண்டல ரயில்வே பயனர் ஆலோசனைக் குழுக் கூட்டம்

சென்னை, டிச.24-

தெற்கு ரயில்வேயின் மண்டல ரயில்வே பயனர் ஆலோசனைக் குழுவின் (ZRUCC) 129வது கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இக்குழுவின் தலைவரான தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு. வெங்கடேசன் மற்றும் டாக்டர் டி. சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.பி (எ) எஸ். ரமேஷ் உட்பட ZRUCCயின் 28 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். மாநில அரசுகள், முதன்மை வர்த்தக மற்றும் தொழில்துறை சபை, பதிவுசெய்யப்பட்ட பயணிகள் சங்கங்கள், பொதுத்துறை நிறுவனம்

மாற்றுத்திறனாளிகளுக்கான இந்திய



அறக்கட்டளை, நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள், ரயில்வே அமைச்சரால் சிறப்பு ஆர்வப் பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்டவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். தெற்கு ரயில்வேயின் முதன்மைத் துறைத் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட அம்ரித் நிலையங்களின் காட்சிகள் உட்பட, இந்த ஆண்டில் தெற்கு ரயில்வேயின் குறிப்பிடத்தக்க சாதனைகளை எடுத்துரைக்கும் ஒரு பவர்பாயிண்ட் விளக்கக்காட்சி வழங்கப் பட்டது.

உள்கட்டமைப்புத் திட்டங்கள், பயணிகளுக்கான வசதிகள், ரயில் சேவைகள், பாதுகாப்பு மற்றும் காவல் உள்ளிட்ட முக்கிய ரயில்வே தொடர்பான விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அம்ரித் நிலையங்கள் திட்டத்தின் கீழ் நிலையங்களை மேம்படுத்தியது உட்பட, சமீப காலங்களில் தெற்கு ரயில்வே மேற் கொண்ட பாராட்டுக்குரிய பணிகளை உறுப்பினர்கள் பாராட்டினர். அவர்கள் தத்தம் பிராந்தியங்கள் தொடர்பான பல்வேறு ரயில்வே பிரச்சினைகளையும் எழுப்பி, ரயில்வேயின் தலையீட்டைக் கோரினர்.

ரயில் உள்கட்டமைப்பின் மேம்பாடு, பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல், ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நீட்டித்தல், மற்றும் பயணிகளுக்கான பிற வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு மதிப்புமிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தெற்கு ரயில்வேயின் பொது மேலாளரும் ZRUCC யின் தலைவருமான திரு. ஆர்.என். சிங், தெற்கு ரயில்வே ஒரு பயணிகள் நட்பு மண்டலமாக, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதோடு, பயணிகளுக்கு மேம் படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறினார். கூட்டத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் முறையாகப் பரிசீலிக்கப்படும் என்றும், சாத்தியமான இடங்களில் பொருத்தமான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொது மேலாளர் உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார். தெற்கு இரயில்வேயின் துணைப் பொது மேலாளர் அஜய் கெ ளஷிக் நன்றியுரை ஆற்றினார்.



# ஹிந்து இளைஞர் கொலை: வங்கதேச அரசை கண்டித்து டில்லியில் போராட்டம்

புதுடில்லி, டிச.24-

வங்கதேசத்தில் ஹிந்து இளைஞர் கொலை செய்யப்பட்டதை கண்டித்து டில்லியில் உள்ள அந்நாட்டு தூதரகம் முன்பு ஹிந்து அமைப்புகள் போராட்டம் நடத்தின.

வங்கதேச மாணவர் அமைப்பின் தலைவர் ஷெரீப் ஒஸ்மான் ஹாதி. கடந்த 18ம் தேதி இவர் அவாமி லீக் கட்சியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த விவரம் வெளியானவுடன் வங்கதேசத்தில் கலவரம் வெடித்தது.மைமென்சிங் நகரில் ஹிந்து இளைஞர் திபு சந்திர தாஸ் என்பவரை ஒரு கும்பல் அடித்துக் கொன்றது. நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் அவரின் உடலை மரத்தில் கட்டி தீயிட்டு எரித்தது. இதனை இந்தியா கண்டித்துள்ளது. டில்லியில் உள்ள இந்தியத் தூதரகம் முன்பு போராட்டம் நடந்தது. போலீசார் அவர்களை அப் புறப்படுத்தினர்.இந்நிலையில், வங்கதேசத்தில் திபு சந்திர தாஸ் கொல்லப்பட்டதை கண்டித்தும் விஸ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தளம் ஆகிய அமைப்புகள் போராட்டம் நடத்தினர். வங்கதேசத்தில் ஹிந்துக்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை கண்டித்தும், இதற்குகாரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும், இந்த போராட்டம் நடந்தது. அப்போது ' பாரத் மாதா கி ஜெய்' என கோஷம் போட்டதுடன் முகமது யூனுஷ் அரசை கண்டித்தும் கோஷம் போட்டனர். திபு சந்திர தாஸ் புகைப்படத்தையும், வங்கதேச அரசை விமர்சித்து பதாகைகளையும் அவர்கள் ஏந்தி வந்தனர். போராட்டக்காரர்களை போலீசார், தடுப்புகளை அமைத்து தடுத்தனர்.ஆனால், தடுப்புகளை தாண்டி போராட்டக்காரர்கள் உள்ளே செல்ல முயன்றனர். இதனையடுத்து போலீசார் அவர்களை தடியடி நடத்தி கலைத்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். போராட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, வங்கதேச தூதரகம் முன்பு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

# ஒடிசாவில் 22 நக்சல்கள் சரண்

புவனேஸ்வர், டிச.24-

ஒடிசாவில் தடைசெய்யப்பட்ட சிபிஐ(மாவோயிஸ்ட்) அமைப்பைச் சேர்ந்த 22 நக்சல்கள், டிஜிபி முன்னிலையில் இன்று சரண் அடைந்தனர்.2026 மார்ச் மாதத்திற்குள் நக்சல் அற்ற இடமாக மால்காங்கிரியை மாற்ற பாதுகாப்புப் படையினர் இலக்கு வைத்துள்ள நிலையில், 22 நக்சல்கள் சரண் அடைந்தது முக்கியமாக பார்க்கப்படுகிறது.ஒடிசா மாநிலம் மால்காங்கிரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட சிபிஐ (மாவோயிஸ்ட்) அமைப்பைச் சேர்ந்த 22 நக்சலைட்டுகள் டிஜிபி, ஒய்.பி. குரானியா முன்னிலையில் சரணடைந்தனர்.சரணடைந்தவர்களில் ஒரு டிவிஷனல் கமிட்டி உறுப்பினர், மற்றும் 6 ஏரியா கமிட்டி உறுப்பினர்கள் அடங்குவர்.சரண் அடைந்தவர்கள் அனைவர் மீதும் ரூ.2 கோடிக்கும் அதிகமான சன்மானம் அறிவிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதுஒடிசா அரசின் நக்சல் சரணடைதல் மற்றும் புனர்வாழ்வு கொள்கையின் கீழ், இவர்கள் ஒவ்வொருவருக்கும் முதற்கட்டமாக ரூ.25,000 நிவாரண நிதி வழங்கப்பட்டது. மேலும், அவர்களுக்கு வீடு, திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் இதர அரசு சலுகைகள் வழங்கப்படுகிறது.




# விண்ணில் பாய்கிறது அமெரிக்க செயற்கைக்கோள்; கவுன்டவுன் தொடக்கம்!

ஸ்ரீஹரிகோட்டா, டிச.24-

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து (டிசம்பர் 24) காலை 'புளூபேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இதற்கான 24 மணி நேர கவுன்டவுன் காலை 8.54 மணிக்கு தொடங்கியது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில், இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மைய ஏவுதளத்தில் இருந்து, நாளை டிசம்பர் 24ம் தேதி காலை, 8:54 மணிக்கு, எல்.வி.எம்., 3 ராக்கெட் வாயிலாக, 'புளூபேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

ஏவுதளத்தில் செயற்கைக்கோள் தயாராக இருக்கும் படத்தை இஸ்ரோ சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ளது. விண்ணில் ஏவுவதற்கான 24 மணி நேர கவுன்டவுன் இன்று (டிசம்பர் 23) காலை 8.54 மணிக்கு தொடங்கியது. இந்த 'புளூபேர்ட்' செயற்கைக்கோளை அமெரிக்காவை சேர்ந்த ஏ.எஸ்.டி., நிறுவனம், தகவல் தொடர்பு சேவைக்காக உருவாக்கி இருக்கிறது.

இதன் எடை 6,500 கிலோ. இது, தொலைதூர கிராமங்களுக்கு, மொபைல் போன், அதிவேக இணையதள சேவைகளை வழங்க உதவும். இந்த செயற்கைக்கோளை, நம் நாட்டின், 'இஸ்ரோ' எனப்படும், இந்திய விண்வெளி ஆய்வு மையம், விண்ணில் செலுத்துவது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# திமுக செய்துள்ள வெளிப்படையான அநீதி; அண்ணாமலை காட்டம்

சென்னை, டிச.24-

போலீஸ் எஸ்ஐ தேர்வில் தமிழை புறக்கணித்துள்ளது, திமுக அரசின் போலி தமிழ்ப் பற்றை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இது தமிழ் வழி மாணவர்களுக்கு திமுக செய்துள்ள வெளிப்படையான அநீதி என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை: தமிழக சீருடை பணியாளர் வாரியம் டிசம்பர் 21ம் தேதி நடத்திய போலீஸ் எஸ்ஐ முதன்மைத் தேர்வுக்கான



கேள்வித் தாளில், தமிழ் கேள்விகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பொதுவாக, சீருடை வாரியம் நடத்தும் இந்த முதன்மைத் தேர்வு, பகுதி 1 80 பொது அறிவு கேள்விகளும், பகுதி 2 60 கேள்விகளில், மாணவர்களின் மொழி வாயிலான தகவல் பரிமாற்றத்தைச் சோதனை செய்வதற்காக, 10 கேள்விகள் தமிழிலும், 10 கேள்விகள் ஆங்கிலத்திலும் இருப்பது வழக்கமான நடைமுறை. மீதமுள்ள 40 கேள்விகள், உளவியல் தொடர்பான கேள்விகளாக அமைந்திருக்கும்.

ஆனால் இந்த ஆண்டு, எந்த முன்னறிவிப்புமின்றி தமிழ் கேள்விகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. 10 ஆங்கிலக் கேள்விகள் மட்டும் இடம் பெற்றிருக்கின்றன. அரசு வெளியிட்ட தேர்வு நடைமுறைகள் மற்றும், மாதிரி வினாத்தாளை மீறி, முன்னறிவிப்பின்றிதேர்வு நாளில் விதிகளை மாற்றுவது, அரசுத் தேர்வுகளின் நம்பகத்தன்மையையே சிதைத்திருக்கிறது.

தமிழ் மொழியின் பெயரால் நாடகமாடும் திமுக அரசு, சார்பு ஆய்வாளர் தேர்வில் தமிழை புறக்கணித்துள்ளது, திமுக அரசின் போலி தமிழ்ப் பற்றை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இது தமிழ் வழி மாணவர்களுக்கு திமுக செய்துள்ள வெளிப்படையான அநீதி.

தமிழ் வழி பயின்ற மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க, இந்தத் தேர்வில் அவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கப்பட வேண்டும் என்றும், மீண்டும் இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000